பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 பங்குனி 16 வெள்ளிக்கிழமை (29-03-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 124

# இராணுவத் தாக்குதல்கள் குடாநாட்டில் தீவிரமாகும்!

## படை அதிகாரி அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 29

**யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீது இராணுவத் தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்படும்; முன்னறிவித்தல் ஏதுமின்றி விமான, ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படும்,**

**இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க இவ்வாறு தெரிவித்ததாக செய்தி ஏஜென்ஸிகள் அறிவித்தன.**

வாராந்த அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பின்னர் நேற்று கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே பிரிகேடியர் இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் முகாம்கள், தளங்கள் மீது பலத்த ஆட்லறி ஷெல் வீச்சும், விமானக் குண்டுவீச்சும் நடத்தப்படும் அந்த இடங்களில் இருந்து தூர விலகி இருந்து தங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது மக்களின் பொறுப்பாகும். — இவ்வாறு இராணுவத்தின் வழமையான மொழியில் பிரிகேடியர் முனசிங்க கூறியதாக அறிவிக்கப்பட்டது.

[அ-உ-3]

## தொடர் தாக்குதல்களுக்கு புலிகள் தயாராகுகின்றனர்!

### படை வட்டாரங்கள் தகவல்

வடக்குக் கிழக்கில் அமைந்துள்ள இராணுவ முகாம்கள் மற்றும் பொலிஸ் நிலையங்கள் மீது தொடர்ச்சியான தாக்குதல்களை மேற்கொள்ளும் திட்டத்துடன் பயிற்சியை முடித்த ஆயிரக்கணக்கான போராளிகள் சம்பந்தப்பட்ட பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''திவயின'' சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக வடக்குக் கிழக்கில் பல இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்கள் இவ்வாறு அனுப்பப்பட்ட போராளிகளாலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவாம்.

விடுதலைப் புலிகளின் சாள்ஸ் அன்ரனிப் படைப் பிரிவு, கெரில்லாப் படைப் பிரிவு, கடற்புலிகள், தற்கொலைப் போராளிகள் ஆகியோர் தாக்குதலுக்குத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் —

ஆனையிறவு, மணலாறு, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்கள் விடுதலைப் புலிகளின் முக்கிய இலக்குகளாக அமையலாம் எனவும் அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கிறது.

[உ-10]

## 2 சிப்பாய்கள் சுழிபுரத்தில் பலி!

ஸ்ரீலங்காப் படையினரின் முழுக் கட்டுப்பாட்டில் இருக்கும் வலிகாமம் சுழிபுரம் பகுதியில் நேற்றுக் காலை 7மணியளவில் வீதித்தடைகளை அகற்ற வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய திடீர்த் தாக்குதலில் இரு சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். மற்றும் சில சிப்பாய்கள் காயங்களுடன் தப்பியோடினர்.

இச்சம்பவத்தின் போது இரு போராளிகள் வீரமரணமடைந்தனர். ரி- 56 - 2 ரகத் துப்பாக்கி ஒன்றும் அதற்குரிய மகஸின்கள் இரண்டும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

கப்டன் றோஸ்மன் அல்லது நல்லவன் (யோசெப் மதியழகன் — தர்மபுரம், கிளிநொச்சி), லெப்டினன்ட் கிளி அல்லது ஜீவன் (ஜேசுதாசன் ஜோன்சன் றொபேர்ட் — பிடாரிக்குளம், மன்னார்) ஆகிய போராளிகளே வீரச்சாவடைந்தனர்.

(உ-ரி-3)

மட்டு. வவுணதீவில்

## தரித்து நின்ற விமானத்தை தாக்க புலிகள் முயற்சி

மட்டக்களப்பு வவுணதீவில் விமானப் படை முகாமில் நிறுத்தப்பட்டிருந்த சிறியரக விமானம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்த விடுதலைப் புலிகள் முயற்சித்த போது அப்பகுதியில் மோதல் இடம்பெற்றதாகவும்—

இச்சண்டையில் இரு சிப்பாய்கள் காயமுற்றதாகவும்—

பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

[உ-6]

## 5 லட்சம் ஒப்பங்களுடன் ஐ. நா. செயலருக்கு மகஜர்

சாவகச்சேரி, மார்ச் 29

இராணுவ அடக்கு முறையால் தமிழீழ மக்கள் அனுபவித்து வரும் இன்னல்களை சர்வதேச சமூகத்துக்கு அம்பலப்படுத்தும் விதத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களில் ஐந்து லட்சம் பேரின் கையெழுத்துக்களுடன் மகஜர் ஒன்று ஐ. நா. செயலாளர் பூட்ரஸ் பூட்ரஸ் காலிக்கும், தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு குரல் கொடுத்து வரும் நாடுகளுக்கும் அனுப்பப்படவுள்ளது.

நேற்று சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெற்ற — வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம், வர்த்தக சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், பொது ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் பங்குபற்றிய — கூட்டம் ஒன்றில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டது.

நிபந்தனையற்ற போர் நிறுத்தத்தைக் கொண்டு வருதல், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தல், வலிகாமத்தை ஆக்கிரமித்துள்ள இராணுவத்தை வெளியேற்றி இடம்பெயர்ந்து அல்லலுறும் மக்களை மீளக் குடியமர்த்த ஆவன செய்தல் போன்ற விடயங்கள் இந்த மகஜரில் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன.

இந்த மகஜரை சகல மக்களுக்கும் தெரியப்படுத்தி -- கிராம சேவையாளர்கள் ஊடாக ஐந்து லட்சம் மக்களின் கையெழுத்துக்களை அவர்களது பதவி விவரங்களுடன் பெற்று— மகஜரின் பின்னிணைப்பாகச் சேர்த்து அவற்றின் பிரதிகள் ஐ.நா. செயலர் உட்பட சர்வதேச சமூகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

[உ-7]

## அனுருத்தவை தொடர்ந்து சென்ற வாகனம் மீது சூடு!

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தையின் வாகனத்தை பின் தொடர்ந்து சென்றதாகக் கூறப்படும் வாகனத்தின் மீது அமைச்சரின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்த சம்பவம் ஒன்று கடந்த திங்கட்கிழமை இரவு கொழும்பு கங்காராமய விகாரைக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் சூட்டுக்கு இலக்கான வாகனம் பலத்த சேதமடைந்தது. வாகனத்தில் பயணம் செய்த இருவரும், வாகனத்தின் சாரதியும் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அரசாங்க கூட்டுத்தாபனம் ஒன்றுக்கு சொந்தமான வாகனம் இது என்று தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

## வவுனியாவில் இருவர் கொலை

வவுனியா நகரில் நேற்று முன் தினம் இருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

(உ-3)

## திருமலைத் தாக்குதலில் சிப்பாய் பலி; மூவர் காயம்

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மகாபொற வெவ சிங்களக் குடியேற்றத்துக்குப் பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருந்த இராணுவ காவலரண் மீது நேற்று முன் தினம் மாலை 4 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஒரு சிப்பாய் உயிரிழந்தார். மற்றும் மூன்று சிப்பாய்கள் காயமடைந்தனர்.

சிங்களக் குடியேற்றக் கிராமத்தில் இருந்த 14 வீடுகள் இத்தாக்குதலின் போது தீக்கிரையானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

[உ-3-6]

யாழ். பல்கலைக்கழகத்தின்

## சகல பரீட்சைகளையும் நடத்த மூதவை முடிவு

சாவகச்சேரி, மார்ச் 29

யாழ். பல்கலைக் கழகத்தில் சகல பீடங்களின் பரீட்சைகளையும் வலிகாமத்துக்கு வெளியே நடத்துவதென யாழ். பல்கலைக்கழக மூதவை நேற்று முடிவு செய்தது.

மூதவையின் கூட்டம் நேற்று கைதடியில் உள்ள சித்த மருத்துவத்துறையில் நடந்த சமயம் இது பற்றிய முடிவு எடுக்கப்பட்டது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் யாழ். பல்கலைக் கழகத்தின் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டாம் என்றும் —

இதை மீறி செயற்பட்டால் நிதி உதவிகள் நிறுத்தப்படும் என்றும் --

தெரிவித்து பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு துணைவேந்தர் பேராசிரியர் கே. குணரத்தினத்துக்கு அனுப்பிய கடிதம் குறித்தும் நேற்றைய கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இந்த விடயத்தில் மூதவைக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பிரதம தபாலகத்தின் செயற்பாடுகள் நிறுத்தம்

### தபால் விநியோகம் பாதிப்பு

சாவகச்சேரி, மார்ச் 29

யாழ். பிரதம தபாலகத்தின் அனைத்துச் செயற்பாடுகளும் இன்றுமுதல் தற்காலிகமாக இடை நிறுத்தப்படும்.

யாழ். பிரதம தபாலதிபர் திரு. சு. கோடீஸ்வரன் இத்தகவலை வெளியிட்டார்.

தற்சமயம் சாவகச்சேரிமகளிர் மகாவித்தியாலயத்தில் இயங்கிவரும் இந்தத் தபாலகத்தினை பாடசாலையை முழுமையாக இயங்க வைப்பதற்கு வசதியாக வேறு இடத்துக்கு மாற்றுமாறு வலயம் ஒன்று கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதனையடுத்து தபாலகத்தினை நிரந்தரமாக ஓர்இடத்துக்கு மாற்றும் வரையில் இதன் செயற்பாடுகளை தற்காலிகமாக இடைநிறுத்த தீர்மானித்திருப்பதாகவும்—

இதனை பெரும்பாலும் மேற்படி பாடசாலைக்கு முன்பாக உள்ள 'கறாஜ்' கட்டடத்தில் இயங்கவைக்க முயற்சிப்பதாகவும்—

திரு கோடீஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை பிரதம தபாலகத்தினை நிரந்தரமாக ஓரிடத்தில் இயங்க வைப்பதற்கு புதிதாக கொட்டகை ஒன்றை அமைத்துத் தருமாறு யாழ். அரச அதிபரிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அரச அதிபர் கொள்கை அளவில்

(4ஆம் பக்கம் பார்க்க)

கல்யாணி கப்பலில் 98 பொதிகளில்

## உடைத்து சோதிக்கப்பட்ட நிலையில் தபால்கள் வந்தன

வடமராட்சி, மார்ச் 29

'லங்கா கல்யாணி' கப்பல் மூலம் 98 தபால் பொதிகளில் எடுத்து வரப்பட்டுள்ள கடிதங்கள் யாவும் படையினரால் உடைத்துப் பரிசோதனை செய்யப்பட்ட நிலையில் காணப்படுவதாகத் தெவிக்கப்படுகின்றது.

தனியாருக்கு வந்த வெளிநாட்டு, உள்நாட்டு கடிதங்கள் மட்டுமல்லாமல் அரச திணைக்களங்களுக்கு அரச முத்திரையுடன் வந்த கடிதங்களும் உடைக்கப்பட்டு சோதனையிடப்பட்டு 'ஸ்ரெப்ளர்' அடிக்கப்பட்டுள்ளன. அத்துடன் படையினரால் சோதிக்கப்பட்டதாக ''சில்'' குத்தப்பட்டும் உள்ளன.

நேற்று கப்பலில் இருந்து இத்தபால் பொதிகள் இறக்கப்பட்டன.

(உ-3-15-173)

## அ.தி.மு.கவுடன் கூட்டா? காங்கிரஸில் கிளர்ச்சி!

எதிர்வரும் தேர்தலில் தமிழ்நாட்டில் அ. தி.மு. கவுடன் கூட்டணி அமைப்பது என காங்கிரஸ் கட்சியின் தலைமைப்பீடம் புதுடில்லியில் எடுத்த முடிவால் கோபமுற்ற தமிழ்நாடு காங்கிரஸ் தொண்டர்கள் நேற்று சென்னையில் காங்கிரஸ் அலுவலகமான சத்தியமூர்த்தி பவனில் வன்செயல் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

அங்கிருந்த நரசிம்மராவின் கட்அவுட்டுக்கு அவர்கள் செருப்பு மாலை போட்டனர்; காங்கிரஸ் கொடியை அரைக்கம்பத்தில் பறக்க விட்ட பின்னர் காங்கிரஸ் செத்துவிட்டதாக கூறி ஒன்று கூடி ஒப்பாரி வைத்து அழுதனர்; பின்னர் காங்கிரஸ் கொடி பறந்த கம்பத்தில் கறுப்புக் கொடியைப் பறக்கவிட்டனர்; வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் நடத்தி பிரதமர் ராவின் கொடும்பாவியை எரித்தனர்.

புதுடில்லி முடிவால் எழுந்துள்ள நிலை குறித்து தமிழக காங்கிரஸ் தலைவர்கள் நேற்று மாலை கூடி ஆராயவிருந்தனர்.

(உ-3-7)

## அ.தி.மு.க.-காங்கிரஸ் கூட்டு: ரஜனிகாந்த் கோபம்!

சென்னை, மார்ச் 29

'காங்கிரஸின் புதுடில்லி தலைமைப் பீடத்தை தமிழக முதல்வர் ஜெயலலிதா பணம் கொடுத்து விலைக்கு வாங்கி விட்டார்''

அ.தி.மு.க. — காங்கிரஸ் தேர்தல் கூட்டு பற்றிய அறிவிப்பால் கோபமுற்ற நடிகர் ரஜனிகாந்த் அமெரிக்காவிலிருந்து விடுத்த அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவித்திருகின்றார்.

'காங்கிரஸின் தலைமைப் பீடத்தை ஜெயலலிதாவினால் விலைக்கு வாங்கமுடியும். ஆனால் தமிழக மக்களை வாங்க முடியாது.'' — இவ்வாறு ரஜனி மேலும் தெரிவித்தார்.

[உ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

E.650K Sriram Honda ஜெனரேற்றர், என்பீல்ட் 3 H. P. water Pump (வில்லியர்ஸ்) என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; S. பொன்னுத்துரை, இடைக்குறிச்சி, வரணி. (40381)

டெலிக்கா வான் ஒன்று விற்பனைக்குண்டு. (Mitsubishi 1400) மண்எண்ணெய்யில் இயங்கக்கூடிய நிலையில் உள்ளது. தொடர்பு: S. V. கோபாலகிருஷ்ணன் ('சேவையர்') மாதனை, பருத்தித்துறை. (41250)

சோக்கேஸ், சாப்பாட்டு மேசை, கட்டில், தையல் மெசின். முருகன் சிவரட்னம் (மோகனதாஸ் சன சமூக நிலையம் அருகாமை), மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி. (41251)

அழகிய நல்லின 1½ மாத "ஜேர்மன் செப்பேட்" ஆண் நாய்க் குட்டிகளும், ஆண்களுக்குரிய "LUMALA" சைக்கிளும் உடன் விற்பனைக்குண்டு. இல. 27, 1 ஆம் ஒழுங்கை, சங்கத்தானை, சாவகச்சேரி (சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்குப் பின்னால்) (41126)

### விற்பனைக்கு

நல்ல இன இரண்டு சானன் ஆடும் குட்டியும் ஜமுனாபாரி கலப்பு ஆடும், குட்டியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு, வண்ணக் காலனிப் பூங்கா இல. 03, கண்டி வீதி, சாவகச்சேரி. (41127)

நல்ல நிலையிலுள்ள National Radio Set, (Model No. Rx 5235), புதிய Filter Fryer (1100 Watt), Toaster Automatic (900 Watt) தொடர்பு: சங்கக் கடை வளவு, வறணி வீதி, வேம்பிராய். (41244)

### தையல் மெஷின் தேவை

நல்ல நிலையிலுள்ள சிங்கர் Zig Zag மற்றும் சாதாரண தையல் மெஷின்கள் நியாயமான விலைக்கு உடன் கொள்வனவு செய்யப்படும். தொடர்பு: ஊஷா ஏக விநியோகஸ்தர், பஸ் நிலையம் அருகில், பருத்தித்துறை. [40394]

### நாவல்கள்

செங்கைஆழியானின் நாவல்கள், சிறுகதைத் தொகுதிகள் என்பனவற்றை 25 சதவீதக் கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம். கமலாம்பிகை நூல் வெளியீட்டகம், 10, மகளிர் கல்லூரி வீதி, கற்குழி, சாவகச்சேரி. (41106)

## எதிர்பாருங்கள்

**31-03-96** உதயனில்

**"பாதுகாவலன்"**

உயிர்ப்பு விழா சிறப்பு மலர்

(40387)

கரவெட்டி கிழக்கு

ஸ்ரீ யார்க்கரு விநாயகர் ஆலயம்

இன்று

## ஆறாம் திருவிழா- 29-03-96

வெள்ளி

**திருவூஞ்சல் இசை:-** காலை 9.30 மணிக்கு

வழங்குபவர்:- ஞானசிரோன்மணி - நயினை.

நா. வீ. மு. நவரத்தினம்

விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

சொற்பொழிவு - மாலை 5 மணிக்கு

விநாயக மகத்துவம்

வழங்குபவர்:- ஆறு. திருமுருகன்

ஆறாம் திருவிழா உபயகாரர்கள்

(41242)

## THE EXCELLENT INSTITUTE

## எக்சலன்ற் கல்வி நிலையம்

புத்தூர் சந்தி,
மீசாலை.

மீண்டும் ......

யாழ்., தென்மராட்சி முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில் ஆண்டு 06 முதல் O/L வரையான வகுப்புக்கள்.

ஆரம்பம்

**03—04—96** புதன்கிழமை மாலை **3. 00**

★ கணிதத்தில் சித்தியெய்த தவறியவர்களுக்கான விசேட வகுப்புகள்.

★ கணிதம், விஞ்ஞானம் வாரத்தில் அதிக வகுப்புகள் அனுமதிகளை **30 — 03 — 96** சனிக்கிழமையில் இருந்து மாலை **3—6** மணி வரை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

நிர்வாகி
நா. கேதீஸ்வரன்

(41122)

## அறிவித்தல்

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் சகல ஊழியர்களையும், பணிப்பாளர் சபை உறுப்பினர்களையும் எதிர்வரும் **31-3-1996**ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சாவகச்சேரி றிபேக் கல்லூரி மண்டபத்தில் சமுகம் தரும்படி வேண்டுகின்றேன். முக்கிய விடயங்கள் ஆராயப்படும்.

தலைவர்:

[41123] மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம்

## பாரதி இன்ஸ்ரிரியூட்

கண்டி வீதி, கொடிகாமம்

**A/L 96, 97**

**A/L 95** பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான மீட்டலும்

ஆரம்பம்: **6 — 4 — 96** சனி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | மகேந்திரன் |
| கணக்கியல் | — | வன்னியசிங்கம் |
| வர்த்தகம் | — | பசில் |
| அளவையியல் | — | R. P. சர்மா |
| வ. புள்ளிவிவரவியல் | — | இளங்குமரன் |
| தமிழ் | — | பாலா |
| இந்துநாகரிகம் | — | அருள்நங்கை |
| இந்துசமயம் | — | பாலா |
| அரசியல் | — | கியூபேட் |
| புவியியல் | — | பிரணவன் |
| கிறிஸ்தவம் | — | மல்லிகா |
| நாடகமும் அரங்கியலும் | — | றொசாந்தன் |

**1-4-96**இல் இருந்து அனுமதிகளை பெற்றுக் கொள்ளவும். (மாலை — 3மணி முதல் 6 வரை)

[சி-4147]

## I. A. S — கமல் அக்கடமி

அலரங்கால் அச்சுவேலி

ஆகிய நிறுவனங்களின் ஒருங்கிணைந்த சேவை

மட்டுவில் மகாவித்தியாலயத்திற்கு அருகாமையில்


(கனகன்புளியடி — நுணாவில் வீதி)

★ ஆண்டு 5 - 11 வரையான வகுப்புகளும் AL/ 96 - 97 கலை, வர்த்தக வகுப்புகளும் அதே ஆசிரியர் குழுவினால் கற்பிக்கப்படும்.

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்வதுடன் நேர அட்டவணையையும் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும். (41254)

## ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரமம்

வதிரி, கரவெட்டி.



## குரு பூசை

மேற்படி ஆச்சிரம ஸ்தாபகர் ஸ்ரீ பரமானந்த சுவாமி அவர்களின் குருபூசை **30 - 03 - 96** சனிக்கிழமை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் தலைமையில் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

அன்று காலை 8-00 மணியிலிருந்து அபிஷேகம், பூசை, பிரார்த்தனை, நற்சிந்தனைப் பாடல், பஜனை ஆகியனவும் தொடர்ந்து 12-30 மணிக்கு மகேஸ்வர பூசையும் நடைபெறும்.

மாலை நிகழ்ச்சியாக பி. ப. 2-00 மணி முதல் 4-30 மணிவரை பஜனைகள் இடம்பெறும்.

அன்பர்கள், அடியார்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் இவ் விழாவில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

"எம் கடன் பணிசெய்து கிடப்பதே"

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இங்ஙனம்;

[illegible] சபையினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கிய அறிவித்தல்

### தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். மாவட்டம்

## பொதுச் சபைக் கூட்டமும் நிர்வாக சபைக் கூட்டமும்

இடம்:- யுப்பிற்றார் கல்வி நிலையம்
பிரதான வீதி, சாவகச்சேரி.

காலம்:- **31-03-96** ஞாயிறு
நிர்வாக சபைக் கூட்டம் **2 - 00** மணி
பொதுச் சபைக் கூட்டம் **3 - 00** மணி

விடயம்: தனியார் கல்வி நிலைய வகுப்புக்களின் நேர அட்டவணை சமர்பித்தலும் புதிய நிர்வாக சபை தெரிவு செய்தலும்.

குறிப்பு:- தனியார் கல்விநிலைய நிர்வாகிகள் ஆசிரியர்கள், பிரத்தியோக வகுப்பு ஆசிரியர்கள் அனைவரும்தவறாது சமூகம் தரவும்.

(41255) பொதுச் செயலாளர்

யாழ். நகரில் இயங்கி வந்த

## NEW SCIENCE ACADEMY

நெல்லியடியில்

## சயன்ஸ் அக்கடமி

### கல்வி நிறுவனத்தில்

(நெல்லியடி சென்றல் வீதியில்)

**A/L 97, 96, 95 மீட்டல்**

★ கணித, விஞ்ஞானப் பிரிவுகள் ★

★ எமது வழமையான ஆசிரியர் குழு ★

ஆரம்பம்:- **05-04-1996** வெள்ளி
பிற்பகல் 3-00 P. M.

குறிப்பு:- விண்ணப்பங்கள் 30-03-96 இல் இருந்து ஏற்றுக் கொள்ளப்படும்.

(41130) - நிர்வாகி

## நிரு ரியூசன் சென்றர்

கோண்டாவில்

**தற்போது சாவகச்சேரியில்!**

**ஞானோதய அக்கடமியில்**

இயங்கவுள்ளது

ஆண்டு **6** முதல் **11** வரையிலான வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம்:- | — | இரா. செல்வவடிவேல் |
| கணிதம்:- | — | இந்திரன் |
| தமிழ்:- | — | N. S. மணியம் |
| | — | யோகராணி |
| ஆங்கிலம்:- | — | மகாலிங்கம் |
| | — | சத்தியமூர்த்தி |
| சமூகக்கல்வி:- | — | வேலா, மயூரன் |
| வர்த்தகம்;- | — | நாதன் |

**31 - 03 - 96** முதல் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

(41134)

## நியூ பிறிலியன்ற் அக்கடமி

கண்டி வீதி, சாவகச்சேரி.

**A/L 96, 97** கலை, வர்த்தக வகுப்புகளும்,
**96** மீட்டல் வகுப்புகளும்

ஆரம்பம்: **2-4-96**

செவ்வாய் பி. ப. **4. 00** மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திருலோகசிங்கம் |
| கணக்கியல் | — | K. பாலாகி |
| வர்த்தகம் | — | S. K. சோதிலிங்கம் |
| வணிகப் புள்ளிவிவரவியல் | — | செ. இளங்குமரன் |
| தமிழ் | — | ராஜேஸ்கண்ணன் |
| இந்து சமயம் | — | ஜோதீஸ்வரன் |
| இந்து நாகரிகம் | — | ஜோதீஸ்வரன் |
| புவியியல் | — | சிவகரன் |
| அளவையியல் | — | திரு. சர்மா |

## SPOKEN ENGLISH
WITH
## GRAMMAR

Lectured By Mr. M. A. HARI
(B. A. Dip: in English)

★ அனுமதி வழங்கும் நேரம் பி. ப. **2 — 5.30** வரை **01—04—96** க்கு முன் அனுமதிகளை பெற்றுக் கொள்ளவும்.

(41136)

# உதயன்

## எல்லோரும் இரட்டை வேடம்!

இனப் பிரச்சினைக்கான தீர்வுத்திட்ட விவகாரத்தில் தமிழ்க் கட்சிகள் இரட்டை வேடம் போடுகின்றன. அவற்றிடமிருந்து எதிர்பார்த்த ஆதரவு கிடைக்கவில்லை—

இவ்வாறு கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகள் மீது ஜனாதிபதி சந்திரிகா சீறிப் பாய்ந்துள்ளார்.

தமிழர்கள் தங்களுக்குச் சேர வேண்டிய, தமக்குரிய அதிகாரம் தமது கைக்கு முழுமையாக வர வேண்டும் என்றே விரும்புகிறார்கள். அதற்காகவே போராடுகிறார்கள். ஆனால்...

தமிழர்களுக்கு உரிய அதிகாரத்தை பகிர்ந்து அளிப்பதற்குத் தானும் சிங்களத் தலைவர்களுக்கு இன்னும் மனம் வரவில்லை.

அதனால் அதிகாரப் பரவல் என்ற இருட்டுக் குகைக்குள் நின்று கொண்டு தீர்வு என்ற பெயரில் தமது மனதுக்குப் பட்ட ஒன்றைத் தமிழர்கள் மீது திணித்துவிட சந்திரிகா முயல்கிறார்.

தமிழர்களுக்குரிய அதிகாரத்தை அவர்தம் கையில் முழுமையாகக் கொடுப்பதற்கும் அதிகாரப்பரவல் செய்வதற்கும் இடையில் மிக நீண்ட இடைவெளி உண்டு.

ஆனால் அந்த அதிகாரப் பரவல் அலகு என்ன, எந்தப் பிரதேசத்தை அது உள்ளடக்கும் என்ற இரண்டு பிரதான விடயங்களை அரசு ஒளித்து விட்டது. மௌனம் சாதிக்கிறது. அதிலும் ஒரு கள்ளத்தனம்; இரட்டை வேடம்.

அவற்றைச் சொன்னால் சிங்கள - பௌத்த பேரினவாதிகளின் கையால் அடிபட வேண்டிவரும் என்ற அச்சம்.

தமிழர்களுக்கு அற்ப சலுகையை கொடுப்பதற்கு கூட பேரினவாதிகள் குறித்து அஞ்சும் சந்திரிகா, அதனைத் தமிழ்க் கட்சிகள் தீபதூபம் காட்டி வரவேற்று வணங்கி ஆதரவளிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். மிரட்டுகிறார்.

தமிழர்களைப் பொறுத்த வரையில் கொழும்புத் தமிழ்க் கட்சிகள் இரட்டை வேடம் போடுகின்றன என்பது உண்மை தான்.

தமிழர்களின் நலனில் அக்கறை உள்ளதாகக் காட்டிக் கொள்வது ஒரு பாத்திரம். சந்திரிகாவின் திட்டத்தைப் பிடித்துத் தொங்கிக்கொண்டு தங்கள் நலனைக் காப்பாற்றிக் கொள்ள பிரயத்தனம் செய்வது இரண்டாவது பாத்திரம்.

இந்த இரட்டை வேடம் [illegible].

ஆனால் சந்திரிகா தனது இரட்டை வேடத்தை மறைத்துக் கொண்டு, தமிழ்க் கட்சிகள் இரட்டை வேடதாரிகள் என்று வசை பாடுவது வேறு.

கொழும்புத் தமிழ்த் தலைவர்களுக்கு இப்போதாவது அரசியல் மானம், சூடு, சொரணை வருமா? அவர்களுக்கு அப்படி ஏதாவது "கொஞ்சநஞ்சம்" இருந்தாலும் —

அரசின் தீர்வுத் திட்டத்தைத் தாம் எதிர்ப்பதாக வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும். அத்தோடு தீர்வுத்திட்ட சட்ட ஆவணத்தை ஆராயும் தெரிவுக் குழுவில் இருந்து வெளியேற வேண்டும்.

தீர்வுத் திட்டத்தை எதிர்த்து தெரிவுக் குழுவில் இருந்து வெளியேறினால் உலகுக்கு சந்திரிகாவின் இரட்டை வேடத்தை வெகு இலகுவாக அம்பலப்படுத்தலாம்.

அதனைச் செய்வார்களா? அதற்கான சுயபலமும், துணிவும் அவர்களுக்கு உண்டா?

## வினைத்திறன் காண் தடைப்பரீட்சை

அரசாங்க, மாகாண அரசாங்க, பொது எழுதுநர் சேவையின் வகுப்பு 11 "அ" பிரிவிலுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மற்றைய சேவையிலும் உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான 1996 ஆம் ஆண்டு வினைத்திறன் காண் தடைப்பரீட்சை நாளை சாவகச்சேரி மகளிர் ம. வி, இல் நடைபெறும்.

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் தமது அனுமதி அட்டைகளை சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்தில் இயங்கும் யாழ். வலயம் ஒன்று கல்விப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம் என வலயம் ஒன்றின் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் அறிவித்துள்ளார். (இ-7)

# வங்காள விரிகுடாவில் நடமாடிய ரோலர்

## ஆயுதங்களுடன் பிடிபட்டது

வங்காள விரிகுடாவில் ஆயுதங்களுடன் நடமாடிய ரோலர் ஒன்றை பங்களாதேஷ் இராணுவம் ஞாயிறன்று இரவு கைப்பற்றியது.

313 இயந்திரத் துப்பாக்கிகள், 208 ரைபிள்கள், 48 சிறிய இயந்திரத் துப்பாக்கிகள், 218 ரிவோல்வர்கள், 20 றொக்கட் லோஞ்சர்கள், 9 மோட்டார்கள் கைப்பற்றப் பட்டன

பங்களாதேஷின் கொக்ஸ் நகரில் இருந்து 4 மைல் அப்பால் உள்ள சப்பல் டாண்டி தீவுக்கு அருகிலேயே ரோலர் கைப்பற்றப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

## பிரிவுபசார விழா

தென்மராட்சிக் கல்விக் கோட்டப் பிரதிப் பணிப்பாளராகக் கடமையாற்றி இளைப்பாறிய திருமதி புஷ்பா கணேசலிங்கத்திற்கு மீசாலை வணிகர் மன்றம் நடத்தும் பிரிவுபசார விழா இன்று மாலை மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலயத்தில் தென்மராட்சி வணிகர் மன்றங்களின் இணையத் தலைவர் க.இ. ஜெயக்குமார் தலைமையில் நடைபெறும்.

## அதிபர்கள் கூட்டம்

சாவகச்சேரி, மார்ச் 29

யாழ்ப்பாணம், நல்லூர் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10. 00 மணிக்கும்—

வேலணை, ஊர்காவற்றுறைக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11. 00 மணிக்கும் — சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறும்.

மேற்படி கூட்டங்களுக்குச் சமூகமளிக்கும் போது 1995 ஆம் வருட ஜி. சி. ஈ. சாதாரண மாணவர் பற்றிய புள்ளி விவரங்களைக் கொண்டு வரும்படி யாழ் கல்வி வலயம் ஒன்றின் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் கேட்டுள்ளார். (இ-7)

## நிதித்துறை அறிவித்தல்

## வைப்பகத்திற்கு வருக

கீழ்க்குறிப்பிடுவோரை கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு இன்று 29 ஆம் திகதி காலை 10 00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகைதருமாறு நிதித்துறை கோரி உள்ளது.

★ மஞ்சுளா தியாகராஜா — இல 6, கதிரவேலு வீதி, அரியாலை.
★ சின்னத்துரை சிவக்கொழுந்து — சிவன் கோவிலடி, சித்தன்கேணி.
★ பத்மசோதி ஜெயராசா — நீர்வேலி வடக்கு.
★ செல்லையா யோகநாதன் அல்லது மகாலட்சுமி மரியநாயகம் — நாவலி கிழக்கு.
★ மல்லிகாதேவி ஐயாத்துரை — இல 84, மூத்த விநாயகர் வீதி, நல்லூர்.
★ இலட்சுமி குழந்தைவேல் — "தேவாசகம்", வாணாப்புலம், சுன்னாகம் கிழக்கு.
★ கனகாம்பிகை பத்மநாதன் — இல 9, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை.
★ பத்மநாதன் முருகவேல் — குலப்பன் லேன், சங்கரத்தை.
★ இராஜேஸ்வரி ரனிஸ்லஸ் — இல 14/1, விதானையார் வீதி, சுண்டுக்குளி.
★ சடையர் நாகமணி — இல 58, கனகரட்ணம் வீதி, அரியாலை.
★ சுப்பையா விஜயகுமார் — இல 62/3, நெடுங்குளம் றோட், கொழும்புத்துறை.
★ மேனா தியாகராஜா — பிறவுண் றோட், கொக்குவில் ஸ்ரேசனடி.
★ தெய்வமணி அரியகுட்டி — கலாஜோதி வாசிகசாலைக்கு அருகில், இணுவில் கிழக்கு.
★ சிவராசசுந்தரம் கணபதிப்பிள்ளை — கும்பிளாவளை, அளவெட்டி வடக்கு.
★ பரமேஸ்வரி முருகையா — பண்ணாகம் தெற்கு.
★ மா. காங்கேயன்— "தேவி இல்லம்", கோப்பாய் தெற்கு.
★ மாரிமுத்து திருஞானசம்பந்தன் — தொல்புரம் மேற்கு.
★ இளையதம்பி தனபாலசிங்கம்—வேம்படி றோட், தாளையடி,
★ மெற்றா லூசியா தோமஸ் — இல 20 A, கடற்கரை வீதி, குருநகர்.
★ சிற்றம்பலம் அப்புத்துரை — சுழிபுரம் மேற்கு,
★ வசந்தா சண்முகம் — மே/பா வே. பரமகுரு, M. S. ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு.
★ இளையவி தம்பித்துரை அல்லது ஜெயலக்சுமி— தியேட்டர் ஒழுங்கை, இணுவில் கிழக்கு.
★ வைரமுத்து நாகலிங்கம் — இல. 14, பொன்னம்பலம் வீதி, அரியாலை.
★ சின்னம்மா வெற்றிவேலு— மே/பா தர்மலிங்கம், கல்வளை வீதி, சண்டிலிப்பாய்.
★ சுப்பன் கிருஸ்ணன் அல்லது பூமணி கிருஸ்ணன்— கல்வளை வீதி, சண்டிலிப்பாய்.
★ சிதேவி கிட்ணன் — அறிவொளி வீதி, புத்தூர் கிழக்கு.
★ சின்னத்தம்பி விக்கினராசா — இலகடி, மாவிட்டபுரம்.
★ பிரான்சிஸ் இராசரட்ணம் — அமிர்தராணி, உயரப்புலம்.
★ மார்க்கண்டு தேசிங்கராசா — ஏழாலை தெற்கு.
★ சிவமலர் சபாரத்தினம் — ஏழாலை தெற்கு.
★ செ. நவராஜா—கோகிலா வீதி, கோண்டாவில் வடக்கு.
★ செல்லையா சுந்தரலிங்கம்—புதுவளவு, ஏழாலை மேற்கு.
★ மனோரஞ்சிதம் சுப்பிரமணியம் — முகாம் ஆராட்சிமா, மல்லாகம்.
★ வல்லிபுரம் ஐயாத்துரை — பூதர்மட ஒழுங்கை, நீர்வேலி தெற்கு.
★ வல்லிபுரம் பொன்னுத்துரை — பூதர்மட ஒழுங்கை, நீர்வேலி தெற்கு.
★ நாகம்மா வீரகத்தி — தல்லுடை, புத்தூர் கிழக்கு.
★ பூதப்பிள்ளை நடராஜா — சுன்னாகம் தெற்கு.
★ கண்மணி சுந்தரம் — பிள்ளையார் வீதி, திருநெல்வேலி மேற்கு.
★ ஆனந்தி சிவசம்பு — கிராம சேவையாளர் பிரிவு, சண்டிலிப்பாய்.
★ சுப்பையா [illegible] — ஏழாலை வடக்கு.
★ காசிநாதர் சிவபாதம் — ஏழாலை வடக்கு.
★ மகேஸ்வரி மதியாபரணம் — இல 52/27, லோட்டர்ஸ் வீதி, வண்ணார்பண்ணை.
★ பரமேஸ்வரி ஆனந்தம் அல்லது பார்வதிதேவி கணேசமூர்த்தி — பலாலி வீதி, திருநெல்வேலிச்சந்தி.
★ செல்லத்துரை சுப்பிரமணியம்—சுழிபுரம் தெற்கு
★ சின்னத்துரை கார்த்திகேசு அல்லது செல்வராணி கார்த்திகேசு — சுதுமலை தெற்கு.
★ சடையர் முருகையா — தாவடி தெற்கு.
★ கந்தப்பு குருசாமி — கரந்தன்.
★ அருள்சீலி சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை— இல. 1/11, தண்ணீர்த்தாங்கி, 1ஆம் குறுக்குத் தெரு, குருநகர்.
★ வேல்முருகு இரத்தினதுரை அல்லது பிலோமினா இரத்தினதுரை — இல. 69, றெக்கிளமேசன் வீதி, குருநகர்.
★ மனோகரி சச்சியானந்தன் — கண்ணகை அம்மன் கோவிலடி, வட்டு. மேற்கு.
★ சுப்பையா தேவராசா — இல. 919, நாவலர் வீதி, அரியாலை.
★ பொன்னம்மா பாலசிங்கம் — சரவணை மேற்கு.
★ ஞானாம்பிகை நடராசா — சுதுமலை தெற்கு.
★ முத்தையா சுப்பிரமணியம் — இல. 100, மூத்த விநாயகர் றோட், நல்லூர்.
★ மீனாட்சி பாலசிங்கம் — சுழிபுரம் மேற்கு.
★ நிக்கிலாஸ்சக்கரம் அல்லது பச்சைக்கிளி — இல. 73, டேவிட் றோட், குருநகர்.
★ நாகலிங்கம் துரைராஜா — நெட்டிலிப்பாய், கோண்டாவில்.
★ சரஸ்வதி வீமன் — ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.
★ சின்னக்குட்டி செல்வராசா — சேந்தாவத்தை, மாவிட்டபுரம்.
★ இராசலட்சுமி பாலசிங்கம் — மே/பா. வ. செல்லையா, நீர்வேலி வடக்கு.
★ கோவிந்தராசா சிவவடிவேல் — இல. 28, காரைக்காட்டு லேன், வண்ணார்பண்ணை.
★ சின்னப்பு வல்லிபுரம் — இல. 32, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர்.
★ சண்முகராசா செல்வராஜா — சிவன்கோவில் ஒழுங்கை, அராலி மத்தி.
★ அருணாசலம் கந்தையா — இல. 234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
★ சின்னத்தம்பி இராசையா சச்சிதானந்தன் — தேவாலய வீதி, உரும்பிராய் கிழக்கு.
★ செல்வரட்ணராஜா சிறிஸ்கந்தராஜா — இல. 183, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
★ பாலசிங்கம் தவபாலன் — இல. 56/1, ராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.
★ பொன்னு சிவப்பிரகாசம் — பொற்பதி றோட், கொக்குவில் கிழக்கு.
★ புஸ்பகாந்தி சோமசுந்தரம்—கைத்தறி ஒழுங்கை, வேலணை மேற்கு.
★ முருகேசு பாலசிங்கம் அல்லது கனகாம்பிகை — முருகமூர்த்தி கோவில் வீதி. நவாலி தெற்கு
★ சின்னத்தம்பி தேவசுந்தரலிங்கம் — நாகலிங்கம் வீதி, கொக்குவில் மேற்கு.
★ வேலுப்பிள்ளை வன்னியசிங்கம் — கற்பகப் பிள்ளையார் கோவிலடி, உடுவில் கிழக்கு.
★ செல்வராணி வீரசிங்கம் அல்லது கீதாயினி வீரசிங்கம் — ஐயனார் கோவிலடி, சுன்னாகம்.
★ சமத்தர் செல்லத்துரை மரியநாயகம் — ஓட்டகப்புலம், வசாவிளான்.
★ வத்சலா சுவேந்திரராஜன் — ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு.
★ செல்லன் சிவபாக்கியம் — உரும்பிராய் மேற்கு.
★ சரவணமுத்து செல்வராசா — இல 34, பெரிய தம்பிரான் வீதி, வண். மேற்கு.
★ தங்கம்மா ஆறுமுகம் — மே.பா ஆறுமுகம் குணபாலசிங்கம், பழைய வீதி, சங்கிலியன் வீதி, கோப்பாய் தெற்கு.
★ கந்தையா கதிரவேலு — தலங்காவிற் பிள்ளையார் வீதி, திருநெல்வேலி மேற்கு.
★ தங்கலட்சுமி நடராஜா — இல 30, சின்னாளன் வீதி (ஆத்திக்காடு), அரியாலை.
★ செல்லத்துரை இராசையா — கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு.
★ முத்துச்சாமி சித்திரவேலு அல்லது சித்திரவேலு திருச்செல்வம் — அரியாலை கிழக்கு.
★ கணபதி துரைராஜா அல்லது சி. செல்லத்துரை — உதயசூரியன் ஒழுங்கை, உடுவில் கிழக்கு.
★ கனகரத்தினம் நடராஜா — இல 219/1, கண்டி வீதி, அரியாலை. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வன்னித்தம்பி இராமலிங்கம்

மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்ட வன்னித்தம்பி இராமலிங்கம் 28- 03- 96 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் ருக்குமணிதேவியின் அன்புக் கணவரும், கிருபாகரன், ஞனாகுமாரன் (கனடா), கரிகாலன் [பிரான்ஸ்], குகபாலினி ஆகியோரின் அன்புத் தந்தையும், நந்தகுமாரின் அன்பு மாமனாரும், இலக்ஷாயினியின் அன்புப் பேரனுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று [29- 03- 96] வெள்ளி நண்பகல் 12.00 மணிக்கு சாவகச்சேரி வடக்கு, மருதடி வீதி வைத்திலிங்கம் சின்னத்தம்பியின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல் :
சி. நந்தகுமார்
[மருமகன்]

தற்போதைய முகவரி:
C/o வை. சின்னத்தம்பி,
மருதடி வீதி,
சாவகச்சேரி வடக்கு.

[41257]

## திருமதி பவளம் சண்முகம்

(உரும்பிராய் கிழக்கு)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், தற்பொழுது வவுனிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பவளம்-சண்முகம் 27 - 03 - 96 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற பிரபல புகையிலை வியாபாரி சண்முகத்தின் அன்பு மனைவியும், பத்மநாதன் (கனடா), தனபாலசிங்கம் (ஜேர்மனி), மதுரநாயகி (உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலை ஆசிரியை), குணநாயகி, ஜனநாயகி, செல்வநாயகி ((டென்மார்க்), சறோஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜயலட்சுமி (கனடா), சந்திரலீலா (ஜேர்மனி), த. திருநாவுக்கரசு (அதிபர், நஉலூர் ஞானோதயா வித்தியாலயம்), பசுபதி, பரமலிங்கம் (சுவிஸ்), குணரத்தினம் (டென்மார்க்), தயாளன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது வவுனிக்குள இல்லத்தில் இன்று (29 – 03 – 96) மாலை 4 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
த. திருநாவுக்கரசு
(மருமகன்)

விலாசம்:
இல. 33
2 ஆம் யூனிற்,
வவுனிக்குளம்.

(41256)

## நாகலிங்கம் ஈசுவரம்பிள்ளை

சுருவிலை பிறப்பிடமாக கொண்ட நா. ஈசுவரம்பிள்ளை காலமானார். இவர் நாகலிங்கம் - சிவக்கொழுந்து தம்பதிகளின் புதல்வரும், நாரந்தனை வடக்கைச் சேர்ந்த செல்லப்பா – அமிர்தம் தம்பதிகளின் மருமகனும், இராமச்சந்திரன், காலஞ்சென்ற சிவஞானசுந்தரம், சிவலிங்கம், கெங்காலெட்சுமி சுப்பிரமணியம், இந்திரா அருட்சோதி, தேவராசா [உத்தரவுபெற்ற நில அளவையாளர்), பேரின்பநாயகம், கங்கைவேணியன் ஆகியோரின் சகோதரரும், விமலாதேவியின் கணவரும், விமலேஸ்வரன், ஜெகதீஸ்வரன், அமுதா, தனேஸ்வரன், வனிதா, திருக்கேதீஸ்வரன் ஆகியோரின் தந்தையாரும், நிர்மலாதேவி, கோசலாதேவி, சுந்தரேஸ்வரன், யோகேஸ்வரன், சறோசாதேவி, சத்தியபாமா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை கொழும்பில் நடைபெறும்.

தகவல்:
நா. தேவராசா

வரணி வடக்கு.

(41133)

## திருமதி கனகம்மா தருமலிங்கம்

யாழ். இல. 55, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடியை சேர்ந்தவரும், தற்போது பெருங்குளம் சந்திக்கு அருகில் வசித்தவருமாகிய த. கனகம்மா நேற்று 28-03-96 காலமானார். அன்னார் மா. தருமலிங்கத்தின் அன்பு மனைவியும், குலேந்திரன் [இலங்கை வங்கி], காலஞ்சென்ற கனேஷலிங்கம் [அரச மரக்கூட்டுத்தாபனம்], மகேந்திரன் [தொழில் நுட்ப உத்தியோகத்தர்], சரோஜினி [ஆசிரியை-வேம்படி மகளிர் கல்லூரி], திருமதி ரோகினி கவிராசசேகரம் [ஆசிரியை, பரியோவான் கல்லூரி], ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி பவளராணி, திருமதி சொரூபி ஆகியோரின் பாசமிகு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று [28-3-96] இவரது தற்போதைய இல்லத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. முத்துக்குமாரன்

மே/பா. வி. நாகராசா
சங்கத்தானை வீதி,
பொருங்குளம் சந்தி,
சாவகச்சேரி.

(41260]

# வடமராட்சி பகுதிகள் மீது தொடரும் ஷெல் தாக்குதல்

வடமராட்சி, மார்ச் 29

பலாலி முகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவும், நேற்று முழுநாளும் வடமராட்சி பகுதி நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன. இதனால் வடமராட்சி அதிர்ந்த வண்ணம் இருந்தது.

இந்த ஷெல்கள் தொண்டமானாறு, கெருடாவில், மயிலியதனை, ஊரிக்காடு பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

அப்பகுதிகளில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்திருந்ததால் பெரும் பாதிப்புக்கள் ஏதும் ஏற்படவில்லை.

இதேசமயம் நேற்றுக் காலை 8 மணியளவில் வெற்றிலைக்கேணியில் இருந்து காங்கேசன்துறை நோக்கிச் சென்ற இரு டோறாப் படகுகள் கரையோரப் பகுதிகளை நோக்கிப் பீரங்கித் தாக்குதலை நடத்தின.

தொண்டமானாறு கரையோரத்தை அண்டிய பகுதியில் ஹெலி ஒன்று வட்டமிட்டு நோட்டமிட்டது.

புதன்கிழமை பூநகரி கடற்பரப்பில் ஹெலி ஒன்று அடிக்கடி பறந்தவண்ணமிருந்தது.
(உ-3-15-36-80-137-173)

## லெப்டினனட் கைது!

கொழுப்பு, மார்ச் 29

ஜனாதிபதியின் அலரி மாளிகை வாசஸ்தலத்தின் பாதுகாப்புக்கென போடப்பட்டிருந்த வீதித்தடைகளை பலவந்தமாக முட்டி மோதிக் கொண்டு வாகனத்தில் செல்ல முயன்ற இராணுவ லெப்டினன்ட் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (உ-3)

## பரமானந்த சுவாமிகள் குருபூசை

சாவகச்சேரி, மார்ச் 29

கரவெட்டு, வதிரியில் உள்ள ஸ்ரீ பரமானந்த சுவாமி ஆச்சிரமத்தின் ஸ்தாபகர் ஸ்ரீபரமானந்த சுவாமிகளின் குருபூசை நிகழ்வுகள் நாளை காலையும், மாலையும் ஆச்சிரமத்தில் நடைபெற உள்ளது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் நிகழ்வுகளுக்கு தலைமை வகிப்பார் [அ-39]

## நலன் வேண்டி ஹோமம்

சாவகச்சேரி, மார்ச் 29

தமிழ் மக்களின் இன்றைய கஷ்டநிலை நீங்கி நலன்பெற வேண்டி கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோவிலில் இன்று மகா கணபதி, நவக்கிரக ஹோமங்கள் நடைபெறுகின்றன. (அ)

## நாவாந்துறையில் மோதல்

கொழும்பு, மார்ச் 29

நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் யாழ். நகருக்கு அருகே நாவந்துறையில் நிலைகொண்டுள்ள படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தியதாக அறிவிக்கப்பட்டது. [உ-3]

## ஹெலி நோட்டம்

கிளிநொச்சி, மார்ச் 29

ஓமந்தை விளக்குவைத்தகுளம் பகுதியை விமானப் படையின் "எம். ஐ. 24" ரக ஹெலி கொப்டர் ஒன்று கடந்த செவ்வாயன்று காலை 11. 30 மணியளவில் வட்டமிட்டு நோட்டமிட்டதாக தெரிவிக்கப்பட்டது. (உ-3)

யாழ். பிரதம--
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இணககம் தெரிவித்திருப்பதாக பிரிவு அஞ்சல் அத்தியட்சகர் திரு எஸ் சிவஞானசுந்தரம் தெரிவித்தார்.

தபாலகத்தின் செயற்பாடுகள் இன்று முதல் இடைநிறுத்தப்படுவதால் இன்று மேற்கொள்ளப்பட விருந்த வெளியூர் மற்றும் வெளிநாட்டு தபால் விநியோகம் தாமதமடையும் என்று தெரிவிக்கப்படுகிறது. [உ-7]

சகல பரீட்சை..-
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கும் பல்கலைக் கழகத்துக்கும் உள்ள அதிகாரத்தை உரிய முறையில் பயன்படுத்துவது என்றும் —

மூதவைத் தீர்மானத்தை மானிய ஆணைக் குழுவுக்கு அனுப்புவது என்றும் —

முடிவு செய்யப்பட்டதாக அறியவந்தது.

இதற்கிடையில் — பல் [illegible] கைதடியில் கூடவிருக்கிறது. (உ-3)

## தந்தை செல்வா பிறந்த நாள் விழா

**31-03-1996** ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிஎவில் பருத்தித்துறை சிவன் கோவிலில் விசேட ஆராதனையும், பூசையும் நடைபெறும்.

சிவன் கோவில் திருமண மண்டபத்தில்

**தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம்**

அவர்களின் திரு உருவப்படத்திற்கு மலர் அஞ்சலியும் செய்யப்படும்.

அனுதாபிகள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விழா எற்பாட்டு குழுவினர்

(46397)

## கல்வாரி பூரண சுவிசேஷ ஊழியங்கள் பிரதிஷ்டை ஆராதனை

எமது ஆலய பிரதிஷ்டை ஆராதனை எதிர்வரும் **30 - 03 - 96** சனிக்கிழமை மாலை 3 30 மணிக்கு மீசாலை வடக்கு, மீசாலை புத்தூர் சந்திக்கு அருகாமையில் நடைபெற இருப்பதால் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது ஆலய ஆரதனை ஒழுங்குகள்:

சனி காலை 9-00 மணிக்கு உபவாச ஜெபம்
ஞாயிறு காலை 9-00 மணிக்கு ஆராதனை.
புதன், வியாழன் மாலை 4-00 மணிக்கு வீட்டுக் கூட்டங்கள்.

நன்றி:
சபை மேய்ப்பன்:
ஊழியர்/விசுவாசிகள்.

கல்வாரி பூரண சுவிசேஷ ஊழியங்கள்,
இல 89, பிறவுண் வீதி,
கொக்குவில்.

(41128)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தங்கப்பிள்ளை முத்துக்குமாரு

சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், தற்போது மட்டுவில், சிவன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கப்பிள்ளை முத்துக்குமாரு 28 – 03 - 96 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துத்குமாருவின் அன்பு மனைவியும், சிவபாக்கியம், இந்திராணி (கொழும்பு) ஆகியோரின் அருமைத் தயாரும், பாலகுமார் (உதயன் நிறுவனம்), வைத்தியநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்ஷினி, சாந்தினி, கமலினி, தவபாலன் (கனடா), சிவசங்கர் (வவுனியா), நந்தகோபன் (கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (29-03-96) காலை 9 மணியளவில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல் :
ம. பாலகுமார்
(மருமகன்)

மே/பா. சி. பொன்னுத்துரை,
சிவன் கோவிலடி,
மட்டுவில்.

(41252)

## திருமதி பார்வதி கனகசுந்தரம்

காரைநகர் கருங்காலியைச் சேர்ந்தவரும், தற்போது வவுனியா வைரவப்புளியங்குளத்தை வசிப்பிடமாக கொண்டிருந்தவருமான திருமதி பார்வதி கனகசுந்தரம் 25-03-1996 அன்று காலமானார். இவர் கனகசுந்தரத்தின் (ஓய்வுபெற்ற களஞ்சிய காப்பாளர்) அன்பு மனைவியும், திருநாவுக்கரசு (யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட ஊழியர்), அன்னலட்சுமி, விமலாதேவி, ஒப்பிலாமணி (உரிமையாளர், மணி அன்கோ-வவுனியா), காலஞ்சென்ற இலங்கேஸ்வரன், கிருஸ்ணதாஸ் (சுவிஸ்), சித்திரா (லண்டன்), சறோசாதேவி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று 28-03-96 வவுனியாவில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. மகாலட்சுமி (பேர்த்தி)

(41135)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 29-03-96 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org